ISSN 2320-589X

# செம்புலம்

பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

உரூ.30/-

விருட்சம் : 5 ஆகஸ்டு : 2017 விழுது : 17

CHEMPULAM

An International Tamil Research Quarterly Journal



ஆசிரியர்

முனைவர் செம்மூதாய் க. சதாசிவம்

Scanned with ACE Scanner

18. முனைவர் பா. இங்கிரிட் போவிங்
முத்தொள்ளாயிரத்தில் கைக்கிளைத் தரும் இன்பம் 91
19. முனைவர் செ. கிளாடின் சுஜிலா
ஆசாரக் கோவையில் ஒழுக்க நெறிகள் 93
20. முனைவர் தே. ஷீஜா மோஷி
தமிழர் மரபில் சித்தமருத்துவமும் வர்மமும் 96
21. முனைவர் சி. அருள் செல்வம்
மன்னர்களின் ஆட்சிமுறை 100
22. முனைவர் ச. அமர்
வெறியாடலும் தமிழர் மரபும் 102
23. சா. சமத்துவராசு சம்பத்
தஞ்சாவூர் ராவ் சாகிப் மு. ஆபிரகாம் பண்டிதர் 105
24. முனைவர் செ. தேன்மொழி
ஐந்நில மக்களின் உணவுப்பழக்கம் 109
25. கு. சாரதி
கல்மரம் புதின இலக்கியப் போக்குகள் 112
26. நா. செல்வம்
சங்க இலக்கியத்தில் முருகன் வழிபாடு 116
27. வே. கல்பனா
பழமொழிநானூற்றில் காணலாகும் பழந்தமிழரின் அற இயல்புகள் 118
28. முனைவர் ஜா. லாலி ஏதேஸ்
ஐம்பெருங்காப்பியங்கள் காட்டும் சமூக அற சிந்தனைகள் 120
29. திருமதி அன்பு ஹன்னா டோரா .பா.த
கை மருந்து 124
30. முனைவர் மா.தே. அருண்மொழி நங்கை
கடல் வழியாகப் பழந்தமிழரின் கொள்வினையும் கொடுப்பினையும் 128
31. முனைவர் செ. கனிகா 131

Scanned with ACE Scanner

# 30. கடல் வழியாக பழந்தமிழரின் கொள்வினையும் கொடுப்பினையும்

முனைவர் மா.தே.அருண் மொழி நங்கை
தமிழ்த்துறை
திருச்சிலுவை கல்லூரி
நாகர்கோவில்.

## முன்னுரை

பழந்தமிழரின் கொள்வினையும் கொடுப்பினையும் குறித்து அறிய முற்பட்ட போது கடல் வாணிபம் மற்றும் வணிகம் பற்றிய தரவுகள் கிடைத்தன.அவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

## புகார் நகர வணிகர்கள்

*"நெடுநுகத்துப் பகல் போல நடுவுநின்று*
*நல்நெஞ்சினோர்*
*வடுஅஞ்சி வாய மொழிந்து தமவும்*
*பிறவும் ஒப்ப நாடி*
*கொள்வதூஉம் மிகைகொளா*
*கொடுப்பதூஉம் குறைகொடாது*
*மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்*
*புலம்பெயர் மாக்கள் கலந்து*
*இனிதுறையும்"*
*(பட்டினப்பாலை, 206-217)*

பட்டினப்பாலை கடியலூர் உருத்திரங்கண்ணனார் இரண்டாம் கரிகாலனைக் குறித்துப் பாடியதாகும். பட்டினப்பாலை எழுதப்பட்ட காலம் கி.மு.2ஆம் நூற்றாண்டாகும். புகார் நகர வணிகர்கள் நடுநிலை தவறாது பழிபாவங்களுக்கு அஞ்சி உண்மை பேசி வாணிபம் செய்தனர். பிறரையும் தன்னைப் போல் கருதி அவர்களுக்கு மதிப்பளித்து வாணிபம் செய்தனர். பண்டமாற்று முறையில் வாணிபம் செய்யும் போது பிறருடைய பொருட்களை அதிக அளவில் வாங்காமலும் தங்களுடைய பொருட்களைக் குறைந்த அளவில் கொடுக்காமலும் வாணிபம் செய்பவர்கள் புகார் நகர வணிகர்கள். தமிழ் வணிகர்கள் 500 வருடங்களுக்கு மேலாக கிழக்கிலும் மேற்கிலுமாக உலகளாவிய வாணிபத்தைச் செய்து வந்தனர். பல நாடுகளில் இருந்து பல மொழி பேசும் மக்கள் வந்து புகார் நகரில் ஒன்றாகத் தங்கி வாழ்ந்து வந்தனர்.

பல்வேறு பொருட்கள் நீர் வழியாக தமிழகம் வந்தன என்பதைப் பட்டினப்பாலை ஆசிரியர்

*"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின்*
*வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும்*
*அகிலும் தென்கடல் முத்தும்*
*குணகடல்துகிரும் கங்கை வாரியும்*
*காவிரிப்பயனும் ஈழத்து உணவும் காழகத்து*
*ஆக்கமும் அரியவும்*
*பெரியவும் நெரிய ஈண்டி வளந்தலை*
*மயங்கிய நனந்தலை மறுகு"*
*(பட்டினப்பாலை, 185-193)*

என்கிறார். வெளி நாடுகளில் இருந்து கடல்வழியாக குதிரைகள் வந்தன.தரை வழியாக கருமிளகு மணிக்கற்கள் சந்தனம் முத்து பவளம் ஆகியன கொண்டு வந்து புகார்நகரில் வாணிபம் செய்தனர். பல்வேறு நாடுகளிலிருந்து கடல் வழியாகக் கப்பல்கள் மூலம் வந்திறங்கின. வெளிநாடுகளுக்கு கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்வதற்கான பொருட்களும் புகார் நகரை வந்தடைந்தன. சோழப்பேரரசின் சின்னமான புலிச் சின்னத்தை அடையாளமாக இட்டு வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்காகப் பொருட்களைக் குவித்து வைத்திருந்தனர். தமிழர் துறைமுகப் பணித்துறையையும், கப்பல்கட்டுதலையும் அறிந்திருந்தனர். அவற்றை நன்முறையில் வைத்திருக்கவும் கற்றிருந்தனர். பெரும்பாணாற்றுப் படை, பிற நாட்டுக்கப்பல்கள் நம் துறைமுகங்களை அடைய வழிகாட்டியாய் அமைக்கப்பட்டிருந்த கலங்கரை விளக்கங்கள் குறித்து கூறுகிறது.

வெளிநாட்டு மாலுமிகள் ஓய்வு எடுத்து தங்குவதற்கு மாலுமி இல்லங்களும், கப்பல்களைச் செப்பனிட கப்பல் பணிமனைகளும், உலர்துறைகளும் இருந்தன எனவும் கூறுகிறார் நரசய்யா. (பக் 51, 52).

"……… கூம்பொடு மீப்பாய களையாது மிசைபரந் தோண்டாது புகாஅர்ப் புகுந்த பெருங்கலத் தகாஅர் இடைப்புலப் பெருவழிச் சொரியும் கடல்பல் தாரத்த நாடுகிழ வோய" (புறம், 30, வரி 10-15).

"ஆற்று முகத்துவாரத்தில் புகுந்த பெருங்கப்பல்களை, கூம்புடன் மேற்பாயைச் சுருட்டாமலும், பொருட்களின் பாரத்தைக் குறைக்காமலும் இடைவழியில் கொண்டு செல்லும்பொழுது பெருங்கப்பலில் இருந்த பல பண்டங்கள் கடலில் கொட்டுகின்ற வளமிக்க நாட்டினை உடைய சோழ வேந்தனே" என்கிறார் சோழன் நலங்கிள்ளி குறித்துப் பாடிய உறையூர் முதுகண்ணன சாத்தனார். இவரது காலம் கி.மு. முதல் நூற்றாண்டாகும்.

சங்க இலக்கியங்களில் தமிழர் வெளி நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்ததைப் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. இவை அயல் நாட்டுப் பயணிகள் மூலம் உறுதிபடுத்தப் பட்டுள்ளன. அயல்நாடு மட்டுமின்றி தமிழர்கள் கடல் மூலமாக வங்க நாட்டில் கங்கை நதி கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் அமைந்துள்ள தாமரலிபதி (TAMRALIPTI) என்ற துறைமுகத்தை அடைந்து, கங்கைநதியில் தமது கலங்களைச் செலுத்தி, வடநாட்டிலுள்ள உள்நாட்டுத் துறைமுகங்களை அடைந்து அங்கும் தமது வணிகத்தை நிலை நாட்டினர்.

கி.மு.2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பட்டினப்பாலையில் 'கங்கைவாரியும் காவிரிப் பயனும்' (வரி. 190) என வரும் வரிகள் கங்கைப் பகுதியில் விளைந்த பொருட்கள் தமிழகம் வந்தன என்பதை உறுதிப் படுத்துகின்றன. அவைகளை நிலவழியாகக் கொண்டு வருவதைவிடக் கடல் வழியாகக் கொண்டு வருவது எளிது என உணர்ந்த தமிழர்கள் தங்கள் கப்பல்கள் மூலம் அதனைக் கொண்டு வந்தனர். கங்கை ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் இருந்த துறைமுக நகரமான தாமரலிபதி என்பதன் வழியே கங்கை ஆற்றில் நுழைந்து, கங்கை ஆற்றில் இருந்த பாடலிபுத்திரம், காசி போன்ற நகரங்களை தமிழர்கள் சென்றடைந்தனர் என்பதை நற்றிணையின் பாடல் வரிகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

கங்கை வங்கம் போகுவர் கொல்லோ- நற்றிணை, 189, வரி 5 இப்பாட்டின்படி, தலைவன் பொருள் தேட தூரைக்காற்றடிக்கும் கானகம் கடந்து தமிழகத் துறைமுகம் அடைந்து கடலில் செல்லும் வங்கம் என்ற பெரும் கப்பலில் ஏறி இனிய குரலை உடைய நாரைகள் வாழும் கங்கை ஆற்றுக்கு சென்றிருப்பார். வேறு எதையும் செய்யாதவர். வேறு இடத்துக்கும் போகாதவர். அவர் விரைவில் வந்து விடுவார் எனவும் தோழி, பொருள் தேடச்சென்ற தலைவன் உரிய காலத்தில் வந்து சேராததால் கவலையடைந்த தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். இந்த கங்கை ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த துறைமுக நகரமான தாமரலிபதி என்பது தாமிரபரணி என்கிற தமிர்கள் ஆற்றின் பெயரில் இருந்து தோன்றியதாக இருக்கலாம். தம்பப்பண்ணி என்ற இலங்கைத் துறைமுக நகரம் தாமிர பரணியின் பெயரில் இருந்து தான் தோன்றியதாகும். தாமரலிபதி (TAMRALIPTI) என்கிற இந்த நகரம் அன்று கலிங்கநாட்டின் கீழ் இருந்து வந்தது.

## வணிகத்துக்கான நீண்ட கடல் பயணம்

கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதுரை மருதனிள நாகனார் என்கிற புலவர் பொருள் தேடி ஆழ்கடலில், மிகப்பெருங்கப்பலில் நீண்ட பயணம் செய்த தலைவன் குறித்து அகநானூற்றுப் பாடல் ஒன்றினைப் பாடியுள்ளார் (அகம்-255, வரி 1-9)

புலால் மணமுடைய கடலின் அலைகளில், உலகமே பெயர்ந்து வந்தது போன்று அச்சம் தரும் மிகப்பெரிய கப்பலை, இயற்கையான பருவக் காற்று வீசி, இரவு பகல் பாராது, எங்கும் நிற்காது, வேகமாக அதனைக் கொண்டு சேர்த்தது. அப்பெருங்கப்பலை இயக்குபவனாகிய நீகான், கடற்கரைத் துறைமுகத்தில் இருக்கும் உயர்ந்த கட்டிடத்தின் மீதுள்ள கலங்கரை விளக்கத்தின் ஒளிகண்டு திசை அறிந்து அதனைச் செலுத்தினான். பொருள் ஈட்டும் பணி காரணமாக அக்கப்பலில் நெடு நாட்களுக்கு முன்சென்ற நமது தலைவர் மேலும் அதிக நாட்கள் அங்கு தங்காது, நமது துன்பம் நீங்குமாறு விரைவில் திரும்பி வருவார் எனத் தனது தோழியிடம் கூறி ஆறுதல் பெறுகிறாள். சங்ககாலத் தமிழர்கள் மிகப்பெருங்கப்பலில் வெளிநாடுகள் சென்று வணிகம் புரிந்து பொருள் ஈட்டினர்.

## தமிழர்களின் கடலாதிக்கம்

கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்ணிக்குயத்தியார் பெண்பாற் புலவர் சோழன் முதல் கரிகாலன், சேரன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனை இரண்டாம் வெண்ணிப்பறந்தலைப் போரில் தோற்கடித்தான். அப்போரில் தோற்றதாலும், போரில் முதுகில் விழுப்புண் பெற்றதாலும் சேரலாதன்



Scanned with ACE Scanner

நாணி வடக்கிருந்து உயிர் துறந்தான். இந்நிகழ்வை, "இப்பாடலில் தோற்ற சேரலாதன் உன்னை விட நல்லவனும் புகழ் பெற்றவனும் ஆவான்" என வெற்றிபெற்ற கரிகாலனிடமே நேரடியாகப் பாடியவர் இவர். இவர் ஒரு குயத்தி வகுப்பை சேர்ந்த பெண்பாற் புலவர். அதே சமயம் நேர்மையும், தைரியமும், புலமையும் உடையவர் அவர்.

*"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி,*
*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"*

எனப் பாடலைத் தொடங்கிப் பாடியுள்ளார் (பு-66). "பெருங்கடலில் காற்றின் தொழில்நுட்பம் அறிந்து அதனைக் கட்டுப்படுத்தி ஆள்வதன் மூலம் பெரும் மரக்கலங்களைச் செலுத்தி வருகிற மரபில் வந்தவனே" எனச் சோழ மரபின் கடலாதிக்கப் பெருமையை இவ்வரிகளில் பாடியுள்ளார் வெண்ணிக் குயத்தியார். அதன்மூலம் சோழர்கள் மிக நீண்ட காலமாகவே கடலோடிகளாக இருந்தவர்கள் என்பதையும், சோழ மண்டலத்தை ஒட்டிய கடல்பரப்பையும், இந்தியாவின் மேற்குக் கடற்பரப்பு முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தவர்கள் என்பதையும் நாம் அறிய முடிகிறது.

பெருங்கடலில் வீசும் காற்றின் தொழில் நுட்பம் அறிந்து அதனைக் கட்டுப்படுத்தி, பெரும் மரக்கலங்களைச் செலுத்திய மரபில் வந்தவர்கள் சோழர்கள் என்பதைப் புலவர் தெரிவிக்கிறார்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறோக்கத்து நப்பசலையார் என்கிற இன்னொரு பெண்பாற்புலவர், மலையமான் குறித்தத் தனது பாடலில் (பு-126, வரி 14-16) சேரர்களின் கடலாதிக்கம் குறித்து

*"சினமிகு தானை வானவன் குட*
*கடல் பொலந்தரு நாவாய் ஓட்டிய*
*அவ்வழிப்பிறகலம் செல்கலாது*
*அனையேம்"*

என்கிறார்.

சங்ககாலப் பெரும்புலவன் கபிலன் அறிவில் சிறந்தவன். பெரும் புகழ் பெற்றவன் ஆவான். இனி யாரும் பாடமுடியாதபடி மலையமானைப் புகழ்ந்து உயர்த்திப் பாடியுள்ளான்.

மேற்குக் கடலில் சேரன் தனது பெருங்கப்பல்களைச் செலுத்தும்பொழுது வேறு யாரும் அவனது ஆணையை மீறி மேற்குக் கடலில் கப்பல்களைச் செலுத்த இயலாது. அது போன்று கபிலன் பாடிய பிறகு பிறர் யாரும் மலையமானை அந்த அளவு உயர்த்திப் பாட முடியாது என்கிறார் புலவர். மேற்குக்கடலில் சேரர்கள் கடலாதிக்கம் உடையவர்களாக இருந்தனர் என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

சேரர்களது அனுமதி இன்றி யாரும் மேற்குக்கடலில் கப்பல்களை செலுத்த முடியாது. மேற்குக் கடலில் சேரர்கள் கடலாதிக்கம் உடையவர்களாக இருந்தனர் என்பதும் இப்பாடலின் அடிக்கருத்தாக உள்ளது.

மேற்கண்ட இரு பெண்பாற் சங்ககாலப் புலவர்களின் பாடல்களும் சேரர்கள் மேற்குக்கடலிலும், சோழர்கள் கிழக்குக் கடலிலும் கடலாதிக்கம் கொண்டவர்களாக இருந்தனர் என்பதையும், பருவக் காற்றையும், கடல் நீரோட்டத்தையும் பற்றிய தொழில் நுட்பத்தை அறிந்து பெருங்கப்பல்களை கடலில் செலுத்தும் திறனைத் தமிழர்கள் கி.மு.3ஆம் நூற்றாண்டுக்கு முன்பே பெற்றிருந்தனர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

## முடிவுரை

சங்க இலக்கியத்தரவுகளும், வெளி நாட்டினரின் குறிப்புகளும், எழுத்தாளர்களின் நூல்களும், கல்வெட்டுகளும், நாணயங்களும், தொல்லியல் சான்றுகளும், இன்னபிறத் தரவுகளும் தமிழர்கள் கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதலே உலகின் பல நாடுகளுக்கும் சென்று அங்கு தங்கி வணிகம் செய்து வந்தனர்.

அவ்வணிகத்தைப் பாதுகாக்கத் தமிழரசுகள் பெரும் கடற்படைகளைப் பராமரித்து வந்தன. தமிழகம் கி.மு. 600 முதல் கி.பி.200 வரை இடைவிடாத உலகளாவிய வணிகத்தை மேற்கொண்டிருந்தது. இவ்வுலக வணிகத்தால் தமிழகம் பெரும் செல்வத்தைப் பெற்றது.

பண்டையச் சங்ககாலத் தமிழகம் பொருள் உற்பத்தியிலும், தொழில்நுட்பத்திலும், வணிக மேலாண்மையிலும் வேளாண்மையிலும் உயர்நிலையில் இருந்ததன் காரணமாகவும் தமிழரசுகள் இடையே இருந்த ஐக்கியக் கூட்டணியின் காரணமாக தான், உலகளாவிய வணிகத்தில் 800 வருடங்களாக இடைவிடாது, தமிழகம் உயர்ந்து நின்று தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருந்தது.